**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 03.01.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில்**
**இளநிலை முதலாம் ஆண்டு மாணவர்களை விவசாய குடும்பத்துடன் இணைக்கும் துவக்க விழா**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, முதலாம் ஆண்டு 2023-24 ஆம் ஆண்டு இளநிலை மாணவர்களை இணைக்கும் திட்டத்தை 02.01.2024 தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார். இணையவழியாக 18 கல்லூரி முதல்வர்கள், மாணவர்கள் மற்றும் இணைப்பு விவசாயிகள் தமிழகம் முழுவதும் கலந்து கொண்டு 2395 மாணவர்களை விவசாயிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் கல்வி, வேளாண் ஆராய்ச்சி மற்றும் வேளாண் விரிவாக்கம் ஆகிய முக்கிய பணிகளை 18 உறுப்புக் கல்லூரிகள், 40 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 15 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் வாயிலாக வேளாண் செய்து வருகிறது.

மாணவர்களின் திறன் மேம்படவும், விவசாயி, விவசாயம், கிராமிய சூழல், வாழ்வியல், சமூகப் பொருளாதார நிலை, வேளாண் தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஆகியவற்றை மாணவர்கள் கற்கும் நோக்கத் தோடு, நடப்பு ஆண்டு முதல், வேளாண் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவர்களை, விவசாய மற்றும் அவரது குடும்பத்தோடு இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தில், ஒவ்வொரு மாணவனும், ஒரு விவசாய மற்றும் அவரது குடும்பத்துடன் இணைக்கப்பட்டு அவர்கள் நான்கு ஆண்டுகள் விவசாய குடும்பத்துடன் தொடர்பில் இருப்பர். விவசாயிகளின் வயல் மற்றும் கிராமத்திற்கு சென்று நேரடியாகவும் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் அலைபேசி மூலம், தேவையின் அடிப்படையில் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்வர்.

மாணவர்கள், வேளாண் சார்ந்த களப்பிரச்சனைகளை விஞ்ஞானிகளுக்கு எடுத்து சென்று தக்க தீர்வு, ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்குவர். மேலும், பல்கலைக்கழகத்தின் புதிய இரகங்கள், மேலாண்மைத் தொழில்நுட்பங்கள், பண்ணைக் கருவிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு எடுத்துச் செல்வர். இந்த திட்டத்தின் மூலம், மாணவர்கள் தாங்கள் கற்ற கல்வி எவ்வாறு வேளாண் வளர்ச்சிக்குப் பயன்படும் என்பதை அறிவர்.

"Seeing is believing and Learning by doing" அதாவது செயல்முறை மூலமாக கற்றல் மற்றும் பார்ப்பனவற்றை மட்டுமே நம்புதல் என்ற விரிவாக்கக் கல்வி கோட்பாட்டிற்கு இணங்க மாணவர்களின் திறன் மற்றும் அறிவு மேம்படுவதுடன் , விவசாயிகளுடனும், சமூகத்துடனும், எவ்வாறு செய்லபட வேண்டும் என்பதை அறிந்து கொள்வர்.

மேலும், விவசாயிகள், தங்களின் அனுபவத்தை , மாணவர்களுக்கு பகி ர்ந்து கொள்ளும் வாய்ப்பு மற்றும் வேளாண் தொழில்நுட்பங்களை அவர்கள் விவசாயத்தில் செயல்படுத்தும் வாய்ப்பை பெறுவர். இத்திட்டத்தினை, முதல்வர் (வேளாண்மை) மற்றும் விரிவாக்கக் கல்வி இயக்குநர், உறுப்பு கல்லூரி முதல்வர்களின் வழிகாட்டுதலின்படி பேராசிரியர்கள், மாணவர்களுக்கு வழிகாட்டுவர்.

வேளாண்மை கல் லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் ந.வெங்கடேசபழனிசாமி, அவர்கள் வரவேற்புரையாற்றினார் . வேளாண் பொறியியல் கல் லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் அ .ரவிராஜ் மற்றும் தோட்டக்கலை கல் லூரி மற்றும் ஆராய்ச்சி நிலை ய முதன்மையர் முனைவர் பெ . ஜரின் வேதமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விரிவாக்கக் கல்வி இயக்கக இயக்குநர், முனைவர் பி.பொ.முருகன் அவர்கள் நன்றியுரையாற்றினார். விரிவாக்கக் கல்வி இயக்கக பயிற்சி பிரிவு பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந.ஆனந்தராஜா அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்

**மக்கள் தொடர்பு அலுவலர்**